21st March 1956]

MR. SPEAKER: Order, order. May I request the hon. Member to put his supplementary question?

SRI A. RATNAM: இதனை விவாதிப்பதற்கு ஒரு மணி நேரம் அவகாசம் வேண்டும். மேலும், கமிட்டியை உடனடியாக அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I think this question itself has taken nearly 20 minutes, and I do not think that any half-hour discussion is necessary. We had more than five and a half hours' discussion on the Demand for Harijan Uplift.

Cultivation of paddy in the Lower Bhavani Project area

* 3454 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have any proposal to permit the ryots in the Lower Bhavani Project area to cultivate paddy to the extent of 1/4 of their holdings from 1949?

There is a mistake, Sir, in the printed question. It should read, Sir, " . . . from 1956 " and not from " . . . 1949 ".

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

SRI N. K. PALANISAMY: I understand from the statements made on the floor of this House and outside that water is allowed for wet cultivation to about 10,000 acres. I understand the total ayacut area of the Lower Bhavani Project is about 210,000 acres. This may be divided into three parts of 70,000 acres each and a little additional water may be allowed to each part during a particular season every year for wet cultivation. During December to April, one part of the area may be supplied with a little more water and this additional water may be used for wet cultivation in one-fourth of the area of this part. During May to August, September to December and January to April another part of the area may similarly be supplied with water for wet cultivation in one-fourth of the area in that part. The same procedure may be adopted with regard to the part also during October–December. The people of that area consider that it is uneconomical to grow any other crop except paddy. Will the Government, therefore, consider this suggestion?

THE HON. SRI M. A. MANICKAVELU: The wet ayacut that is tentatively fixed is 10,000 acres. But it is also not localised, and it is not possible to localise now. It is only after some time it can be localised. If there is any necessity on account of seepage that the above extent should be enlarged, that will also be done.

SRI K. R. NALLASIVAM: இப்பொழுது ஆயிரம் எக்கரா வரையில் நெல் சாகுபடி செய்யலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு மேலும் இப்பொழுது அதிகமான பூமியில் கசிவு ஏற்பட்டிருப்பதால் தானே நீர்க்கசிவு அதிகமாகவுள்ள பூமியில் நெல் சாகுபடி செய்து வருகிறார்கள். இந்தமாதிரியான இடத்திற்கு தண்டத் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. எனவே சர்க்கார் பர்மிட் பண்ணியிருக்கிற பூமிக்குமேல் நீர்க்கசிவு உள்ள இடத்திலும் சாகுபடி செய்யலாம் என உத்தரவு போடுவார்களா ?

[21st March 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : In the first instance penalty will be levied. But after examination, if it is a justifiable one, the Government will cancel the penalty. That is the position, Sir.

SRI B. K. NALLASWAMI : நீர்க்கசிவு ஏற்பட்டிருக்கிற பூமிகளில் நெல் சாகுபடி செய்துகொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதற்காக நெல் கசிவு உள்ள பூமிகள் என்று கணக்கு எடுக்க பிரத்தியேக அதிகாரிகளைப் போட்டு கணக்குகள் தயாராய் இருக்கின்றன. ஆனால் அவை இன்னமும் பிரசுரிக்கப்படாதலாலே கிராமங்களில் யார் யாருடைய பூமி நீர்க்கசிவு உள்ளது எனத் தெரியாமல் இருக்கின்றது. இந்த ஜாப்தா பிரசுரிக்கும்போது, நீர்க்கசிவு உள்ளவரின் பூமி நீர்க்கசிவு அற்றது என குறிப்பிடப்பட்டிருந்தால் அவர் அப்பீல் செய்துகொள்வதற்கும், கீழ் பவானி தண்ணீர் நிறுத்தப்படுவதற்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The hon. Member said that he would make a representation. I shall await that representation, Sir.

SRI K. T. RAJU : நீர்க்கசிவு ஏற்பட்டிருக்கிற இருபதாயிரம் ஏக்கருக்குமேல் இந்தப் பசலியில் நெல் சாகுபடி செய்திருக்கிறார்கள். சர்க்காரின் அதிகாரிகளும், அவர்களுக்கு 6-ம் நம்பர் நோட்டீஸ் கொடுத்து தண்டத் தீர்வை விதிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுவிட்டார்கள். தண்டத் தீர்வை நிச்சயம் போட்டுவிடுவார்கள் என்று தெரிகிறது. கனம் அமைச்சர் அவர்கள் இன்னும் நீர்க்கசிவு உள்ள பூமி என்ன என்பதை சர்க்கார் அளவில் நிர்ணயிக்காததால், எந்த விதமான தண்டத் தீர்வையும் போடக்கூடாது என உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தண்டத் தீர்வை கட்டாயம் போடுவார்கள். அதுவும் முதலில்தான் போடுவார்கள். பிறகு அந்த பூமி நெல் சாகுபடிக்குத்தான் ஏற்றது எனத் தெரிந்துவிட்டால் கட்டாயம் அந்தத் தண்டத் தீர்வையை நீக்கிவிடுவார்கள்.

SRI K. T. RAJU : கண்டிப்பாக தண்டத் தீர்வை போடுவார்கள் என்று சொன்னால் பரவாயில்லை. போடுகிறோம் என்று சொல்லுங்கள். போட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். ஆனால் அந்தத் தண்டத் தீர்வை பணத்தை வாங்காதீர்கள். அப்படி இருப்பதற்கான நடவடிக்கை எடுப்பார்களா ? (சிரிப்பு.)

THE HON. SRI M. A. MANICKAVELU : பணம் வாங்காவிட்டால் பிரயோஜனம் இல்லை.

SRI S. THINAKARASAMI THEVAR : May I know frim the Hon. Minister the total ayacut area of the Lower Bhavani Project and whether any restriction is placed in the matter of provision of water for wet irrigation?

THE HON. SRI M. A. MANICKAVELU : The total acreage of the ayacut is 210,000 or 107,000, of which 10,000 is to be for wet cultivation, and that will also change according to the examination made about seepage, when it may also go beyond 10,000 acres.

SRI K. R. NALLASIVAM : இப்பொழுது நெல் கசிவு ஏற்பட்டிருக்கிற பூமிகள் என்ன என்ன என்று கணக்கு எடுப்பதற்காக அஜ்மாயிஷ் தாசில்தாரும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் போடப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களிடம் வந்து யார் லஞ்சம் கொடுக்கிறார்களோ அவர்களுடைய பூமி நீர்க்கசிவு என்பதாகவும், பணம் கொடுக்காதவர்களின் பூமி நீர்க்கசிவு அற்றதாகவும் எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் இவர்கள் பின்னால் தண்டத் தீர்வை அளிக்கும்படியாக வரும். சர்க்கார் வேண்டுமென்றால் என்னிடம் ஒரு ஸ்டாப் கொடுத்தால் அவர்களிடம் இவர்கள்

எவ்வளவு லஞ்சம் வாங்கியிருக்கிறார்கள் என்பதை நான் நிரூபிக்கிறேன். இதைப்பற்றி விசாரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : லஞ்சம் என்று சும்மா புகார் சொன்னால் போதாது. இவற்றை எழுதி எனக்கு அனுப்பினால் அதன்பேரில் நடவடிக்கை எடுக்க நான் தயார்.

SRI P. G. KARUTHIRUMAN : நீர்க்கசிவு என்று சொல்லக்கூடிய இடங்களில் தண்ணீர் ஆறுபோல ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். இந்த நீர்க்கசிவு உள்ள பூமியில் நெல் சாகுபடி செய்தால் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. உண்மையிலேயே நீர்க்கசிவு உள்ள பூமியில் சாகுபடி செய்கின்றவர்கள் கட்டிய தண்டத் தீர்வையை திரும்பவும் வாபஸ் செய்யவும், நீர்க்கசிவு இல்லாத பூமியில் சாகுபடி செய்கின்றவர்களிடமிருந்து தண்டத் தீர்வையை வசூல் செய்யவும் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முன்பு அதிகாரிகள் பத்து ஆயிரம் ஏக்ராவரையில் நஞ்சை சாகுபடிக்கு அனுமதித்தால் போதும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது நடைமுறையில் பார்த்தால் அது போதாது என்று தெரிகிறது. இந்தத் தண்டத் தீர்வை விஷயமாக கனம் அங்கத்தினர் ஒரு பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். அதை சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அந்தப் பரிசீலனை ஆனவுடன் ஒரு முடிவு சீக்கிரமே எடுக்கப்படும்.

SRI N. K. PALANISAMY : The Hon. Minister was saying that ten thousand acres will be allowed for wet cultivation. May I know whether the above ten thousand acres will be selected in Gobichettipalayam taluk—Sri Karuthiruman's Constituency—or will be distributed throughout the ayacut area.

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, it will be all over the area including the hon. Member's constituency. But it will be over an area where there is seepage.

SRI K. R. NALLASIVAM : இந்த நீர்க்கசிவு பிரதேசத்தைக் கணக்கு எடுக்க அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் லஞ்சம் வாங்குவதினால் நீர்க்கசிவு இல்லாத பிரதேசத்தை நீர்க்கசிவு என்று எழுதியும், லஞ்சம் கொடுத்தவர்கள் பூமி நீர்க்கசிவு உள்ளதாக இருந்தாலும் நீர்க்கசிவு அற்றது என்று எழுதியிருக்கிறார்கள். இந்த உத்தியோகஸ்தர்களை சர்க்கார் அதிகாரிகளாகவே போட்டதால்தான் இந்த விளைவு. அந்தப் பிரதேசத்தில் உள்ள விவசாயம் நன்றாகத் தெரிந்த சில நபர்களையும் இவர்களோடு சேர்த்துவிட்டு நீர்க்கசிவு உள்ள பூமி எது என்று நிர்ணயிக்கச்செய்தால் இந்தமாதிரியான தகராறு வராது. அப்படிச் செய்யச் சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது அனர்த்தத்தில்தான் முடியும் என்று நினைக்கிறேன்.

SRI B. K. NALLASWAMI : இந்த நீர்க்கசிவு சில வருஷங்களுக்குத்தான் இருக்குமா ? அல்லது நீடித்து இருக்குமா ? எத்தனை ஆண்டுகள் இருக்கலாம் என நிபுணர்கள் ஏதாவது சொல்லியிருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. முன்பு அதிகாரிகள் பத்தாயிரம் ஏக்கரா போதும் என்று சொன்னார்கள் என்றும், ஆனால் நடைமுறையில் அது போதவில்லை என்றும் தெரிவதாகவும் சொன்னேன். ஆகவே இதைப்பற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

SRI T. C. NARAYANAN NAMBIAR : Sir, it is not for putting a supplementary question that I have asked permission of the Hon. Speaker, but to know the meaning of the oft-repeated word " Neerkasivu ". I think it is an important word.

10-0 a.m. SEVERAL VOICES : It means " seepage ".

MR. SPEAKER : Percolation of water.

SRI T. S. ARDHANARI : நீர்க்கசிவு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இடங்களில் புஞ்சைப் பயிர் போட முடியாது. தண்ணீர் கசிவின் காரணமாக நெல் சாகுபடி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதற்காக சர்க்கார் வந்தனம் செலுத்துவதை விட்டு அவர்களுக்கு அபராதம் போடுவது அவ்வளவு சரியாக இருக்காது. முடியுமானால் தண்ணீரை கசியவிடாமல் சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமேயொழிய தண்டத் தீர்வை போடுவது சரியல்ல. ஆகவே தண்டத்தீர்வை விதிப்பதை சர்க்கார் கைவிடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது நீர்க்கசிவு இருக்கிறது. ஒரு காலத்தில் அந்த இடத்தில் நீர்க்கசிவு இல்லாமல் இருக்கலாம். இப்பொழுதே தண்டத்தீர்வை போட்டுவிட்டால், பின்னால் தகராருக்கு இடம் இருக்காது. இப்பொழுது போடாமல் விட்டு விட்டால் " ஏன் ஆரம்பத்திலேயே போட்டிருக்கக்கூடாது ? இரண்டு மூன்று வருஷங்களாக பயிர் செய்வதற்கு விட்டுவிட்டு ஏன் இப்பொழுது போடுகிறார்கள் ?" என்ற கேள்விக்கு இடமில்லாமல் இருப்பதற்குத்தான் முதலிலேயே போட்டுவிடுகிறோம்.

SRI K. T. RAJU : இந்தியாவிலேயே எந்த அணைக்கட்டிலும் இல்லாத ஒரு நீர்க்கசிவு நம்முடைய ராஜ்யத்தில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டிலிருந்து ஏன் ஏற்படுகிறது என்பதை பரிசீலனை செய்யவேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் டிசம்பர் மாதம் அங்கு சுற்றுப் பிரயாணம் செய்த போது சத்தியமங்கலம் ரோட்டிலே போவதற்குள் பல கால்வாய்களை கடந்து போகவேண்டி இருந்தது. அந்த கால்வாய்கள் எல்லாம் திட்டமிட்டு வெட்டப்பட்டவை அல்ல. சதாரண வாய்கால்களை விட பெரியவை. இப்படிப்பட்ட பிரத்தியேகமான சூழ்நிலை அங்கு இருப்பதை கணக்கெடுத்துக்கொள்ளவேண்டும். கசிவு ஏன் வருவது என்பதை பரிசீலனை செய்யவேண்டும் ஏதோ தவறு ஏற்பட்டுவிட்டது, அதற்கு ஒரு முடிவு காண்கிறவரையில் இந்தத் தண்டத் தீர்வை ஒத்திவைக்கப்பட வேண்டும். விவசாயிகள் நஞ்சைப் பயிர் செய்கிறார்கள் என்றால் அது ஒரு குற்றமாகாது. சட்டத்திற்கு புறம்பாக தண்ணீரை எடுத்து உபயோகப் படுத்தியிருந்தால், அவர்களுக்கு தண்டத் தீர்வை போடுவது நியாயம். அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கசிவு அப்படிப்பட்டதல்ல. விவசாயிகளை மிரட்டுவதற்கு தண்டத் தீர்வை போடுவது என்பது அறியாமை.

THE HON. SRI M. A. MANICKAVELU : யாரையும் மிரட்டவில்லை. ஆயக்கட்டில் நன்செய் நிலத்தை நிர்ணயிக்க முடியவில்லை. தண்ணீர் இப்படியும் ஓடும். அப்படியும் ஓடும். ஒரே இடமாக தண்ணீர் ஓடுவது கிடையாது. அந்த இடத்தில் நெல்சாகுபடி செய்யலாம் என்ற முடிவுக்கு வரும் வரையில் ஒன்றும் செய்வதற்கில்லை.

SRI S. RAMALINGAM : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது இப்படி ஓடும் அப்படி ஓடும் என்று சொன்னார்களே, அதை எப்படி எழுதுவது என்று கேட்கிறேன். (சிரிப்பு)

SRI P. G. KARUTHIRUMAN : தண்டத்தீர்வை தண்டத்தீர்வை என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். நான் சர்க்காருக்கு ஆலோசனை சொல்லுவது என்னவென்றால் ஆரும் நெம்பர் நோட்டீஸ் கொடுத்து தவறுதல் என்று கண்டுபிடித்து பின்னால் தண்டத்தீர்வை போடுவது தவறு. இப்பொழுது தவறுதலாக உபயோகப் படுத்தின அதே இடத்தில் மறுபடியும் தவறான முறையில் பயிர் செய்யாமல் இருப்பதற்கு அவசரச் சட்டத்தைப்போட்டு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த யோசனை புரியவே இல்லை.

21st March 1956]

Sri P. G. KARUTHIRUMAN : கனம் மந்திரி அவர்கள் புரியவில்லை என்று சொன்னார்கள். தண்டத் தீர்வை போடும்படியான சந்தர்ப்பம் எப்படி என்றால் தவறுதலாக நஞ்சை விவசாயம் செய்வதற்கு தண்ணீர் எடுத்துக்கொண்டால் அப்போதே பயிர் செய்யாமல் இருப்பதற்கு ரெவின்யூ அதிகாரி எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதில்லை. அறுவடைச் செய்வதற்கு பிறகு போடுவதைவிட முதலில் தவறு செய்தால் அப்போதே தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க சட்டத்தை திருத்துவதற்கு முன்வருவார்களா என்று கேட்கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ஏன் அப்போது தடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியவில்லை. தண்ணீர் அதிகமாக இருந்தால் நெல் சாகுபாடிதானே செய்யமுடியும். அதை ஏன் தடுக்கவேண்டும் ?

Sri P. G. KARUTHIRUMAN : நீர்க்கசிவு மூலமாக ஏற்படும் தண்ணீரானது காடுகட்கும் சென்று, அங்கு வயலாக்க நன்மை செய்கிறது. அதே நீர்கசிவு தண்ணீர்த்தான் ஹரிஜன் சேரிகளுக்குள்ளே நுழைந்து சேரிகளைப் பாழ்படுத்துகிறது. ஹரிஜனச் சேரிகளுக்குள் தண்ணீர் போகாமல் இருப்பதற்கு வழி செய்வார்களா ? எத்தனையோ சேரிகள் இதனால் நஷ்டம் அடைந்திருக்கிறது என்பதை கவனித்தாவது பரிகாரம் காண்பதற்கு கனம் மந்திரி அவர்கள் முயற்சிப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : தண்ணீர் ஓட்டத்தை நிறுத்த "ஸிங் கான்யூட்" ஆலேயே முடியவில்லை, நான் என்ன செய்யமுடியும்.

Sri P. RAMAMURTHI : அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நீர்க்கசிவுக்குக் காரணம் கனம் மந்திரி அவர்கள் கையில் இல்லை, சர்க்கார் கையிலும் இல்லை. இயற்கையின் சக்தியினால் இம்மாதிரி ஏற்பட்டிருக்கிறதென்று ஒத்துக் கொண்டார். அம்மாதிரி தண்ணீர் கசிவு எடுத்து ஓடக்கூடிய காலத்தில் தடைசெய்வதும் சரியானதல்ல என்றும் ஒத்துக்கொண்டார். சாகுபடி செய்யக்கூடிய காலத்தில் தண்டத்தீர்வை மட்டும் ஏன் போட்டாகவேண்டும். இயற்கையினுடைய காரணத்தினால் ஏற்படக்கூடிய விஷயத்திற்கு விவசாயிகள் மீது தண்டத்தீர்வை போடுவது என்பது கூடாது. அப்படிப் பட்ட விவசாயிகளின் மீது தண்டத்தீர்வை போடுவதை நிறுத்திவிட்டு விசாரணை செய்ய முன்வருவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அதை ஏன் அப்படிச் செய்ய வேண்டும் என்றால், இப்பொழுது அங்கே நஞ்சை பயிர் செய்யப்பட்டாலும் பிறகு நஞ்சைப்பயிருக்கு லாயக்கு இல்லாமல் புஞ்சைப்பயிருக்கு லாயக்காக இருக்கும். இப்பொழுது தண்ட தீர்வை போடாமல் விட்டு விட்டால் 2, 3 வருஷங்கள் கழித்து அங்கு நிலைமை மாறும்போது ஜனங்கள் அப்பொழுது ஆட்சேபிக்கக்கூடும். "இரண்டு மூன்று வருஷங்களாக பயிர் செய்து வந்தும் ஆட்சேபிக்காமல் இப்பொழுது மட்டும் ஏன் ஆட்சேபனை" என்று அங்குள்ளவர்கள் கேட்பார்கள் என்பதற்காகத்தான், பின்னால் ஏற்படக் கூடிய ஆட்சேபனைகளை உத்தேசித்து இப்போதே தண்ட தீர்வை விதிக்கிறார்கள்.

Sri P. RAMAMURTHI : இன்றைக்கு விவசாயிகளுக்கு வீணாக ஏன் தொந்திரவு கொடுக்கவேண்டும். ஏதோ பின்னால் ஏற்படக்கூடிய கஷ்டங்களுக்கு இப்பொழுதே பரிகாரம் தேடிக்கொள்வதுதான் அரசாங்கத்திற்கு பிரதானமா ? அல்லது விவசாயிகளுடைய வாழ்க்கை அரசாங்கத்திற்கு பிரதானமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: விவசாயிகளுக்கு தொந்திரவு கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து அல்ல. பின்னால் அதிகத் தொந்திரவு ஏற்பட்டுவிடுமோ என்று இப்பொழுது கொஞ்சம் தொந்திரவு கொடுத்தாலும் பரவாயில்லை என்பது என்னுடைய கருத்து.

Sri K. R. NALLASIVAM : நீர்க்கசிவு பிரதேசங்களில் இன்னொரு விதமாகவும் பல இடங்களில் நீர்க்கசிவு ஏற்பட்டு தண்ணீர் வெளிக்கிளம்பி ஓடுகிறது. புஞ்சை வெள்ளாமை வைத்தும்கூட மூன்றுமாதம் தண்ணீ

விடுவதற்கு முன்னும் ஈரம் கசிந்து போவது கிடையாது. கம்பு, கேழ் வரகு, பருத்தி போன்ற புஞ்சை வெள்ளாமை அங்கு வருவது கிடையாது. அதை "ஈரக்கொடி" நிலம் என்று விவசாயிகள் சொல்லுவார்கள். என் ஜூனியர்கள் அதற்கு என்ன பெயர் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. ஆகவே கனம் மந்திரி அவர்கள் இதுமாதிரி ஈரக்கொடி நிலங்களுக்கும் நெல் சாகுபடி வைத்துக்கொள்ள அனுமதிக்க யோசிப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இம்மாதிரி நிலத்திலே ஈரம் ஏற்பட்டு நெல் சாகுபடி செய்யமுடியும். புஞ்சை சாகுபடி செய்துவிட்டா தென்றால் அந்த இடத்திலே நெல் சாகுபடி செய்யலாம் என்று அர சாங்கம் உத்திரவு கொடுப்பார்கள் என்று முன்னமே சொன்னேன். புஞ்சை சாகுபடிக்கு லாயக்கில்லை என்றால் நஞ்சை சாகுபடி செய்யலாம். ஆனால் அது தற்காலிகமானதுதான்.

Sri T. S. ARDHANARI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது, இந்தக் கசிவுத் தண்ணீரை உபயோகப்படுத்தினால்தான் விவசாயிகளுக்கு தண்டத் தீர்வை போடப் படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் அங்கே விவசாயிகள் புஞ்சை தானியங்களையும் பயிர் செய்யமுடியாது ; ஏனென்றால் நிலம் ஈரமாக இருந்தால் புஞ்சைத் தானியம் விளையாது. ஆகவே அங்கே நஞ்சைத் தானியமும் பயிர் செய்யப்படாமல், புஞ்சைத் தானியமும் பயிர் செய்யப் படாமல் விவசாயிகள் நஷ்டமடைகிறார்கள். கசிவுத் தண்ணீர் காரண மாகத் தான் இந்த நஷ்டம் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே இது விஷயத்தில் அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னையும் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. சீக்கிரத்தில் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும்.

Mr. SPEAKER : Question time is over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—STATEMENT UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE*. DAMAGE CAUSED TO CULTIVABLE LANDS BY THE CONSTRUCTION OF A NEW BRIDGE OVER THE PENNAR RIVER AND A NEW ROAD PASSING THROUGH THE VILLAGES OF PIDAGAM AND NATHAMEDU.

Mr. SPEAKER : The hon. Member Sri V. R. Nagarajan has given notice of a motion under Rule 40 of the Assembly Rules calling the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, viz., construction of a new bridge over the Pennar river and a new road from the Madras-Tiruchirappalli Trunk Road passing through the villages of Pidagam and Nathamedu which affect cultivable lands.

* **Sri V. R. NAGARAJAN** : Mr. Speaker, Sir, I wish to draw the attention of the Hon. Minister for Public Works to the encroachment made on the lands of a few agriculturists, who are small pattadars, adjoining the Pennar river at the sixth mile from Villupuram for the construction of a new bridge. No doubt the bridge is built for a laudable purpose and I do concede that for the construction of that bridge some lands here and there will have necessarily to be acquired by the Government under the Land Acquisition Act. But my point is that they should do it with the least trouble and hardship to the villagers who are affected thereby.